**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Life Oriented Ethics in *Thirukkural*

**Dr. P. V. Jemipriya,** Assistant Professor of Tamil, Pop College, Sayarpuram, Tuticorn, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0077-5573**
**DOI: 10.5281/zenodo.6622871**

## Abstract

*Thirukkural is a didactic treatise that helps to everyone to live a magnanimous life in the world. Thirukkural is glorified as Muppal. It delineates the code of virtues in a superb manner. The ancient work Puranaanuru evinces as Aranum Porulum Inbamum Aatrum Perumanin Selvam in its beginning, insisting on the virtues of life. It is clear that wealth and happiness will exist out of charity as evinced in the treatise "Puranaanuru". All of them insist wealth should be earned through a good path. The article decodes such evidences from the didactic "Thirukkural".*

**Keywords:** *Thirukkural*, Thiruvalluvar, Life, Ethics.

## References

[1] P.S. Aasarya. *Thirukural*. Narmatha Pathipagam, Chennai, 2020.
[2] Kalaga Veliyeedu. *Pathinenkeelkanaku*. Naladiar Tirunelveli Saiva Sithantha Noorpathipagam, Chennai, 2007.
[3] C.Ganasayar. *Thokappiya Uraithogai* 3. Tamilmann Pathipagam, Chennai, 1943.
[4] Dr. K.V.Balasubramanian. *Poorananooru*. New Century Book House (P) Lt. Chennai 2004.
[5] P*athnenkeelkanaku* 1, *Nanmanikadigai*, Manavar Pathipagam, Chennai, 2014.
[6] *Purananooru Moolamumum Uraiyum* - Kalaga Veliyeedu.
[7] *Thirukkural* - Tamilannal Urai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# திருக்குறளில் வாழ்வியல் அறநெறிகள்

முனைவர் பி. வெ. ஜெமிபிரியா, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
போப்கல்லூரி சாயர்புரம், தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0077-5573
DOI: 10.5281/zenodo.6622871

**ஆய்வுச்சுருக்கம்**

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஒளிவிளக்கு திருக்குறள். முப்பால் என்று போற்றப்படும் திருக்குறள், அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகிறது. பழந்தமிழ்ப் பாடலாகிய *புறநானூறு, அறனும் பொருளும் இன்பமும் ஆற்றும் பெருமநின் செல்வம்* என்னும் தொடரால் அறத்தை முதன்மைப்படுத்தி மொழிகிறது. *அறத்தின் வழியே பொருளும் இன்பமும் தழைத்தோங்கும் என்பது சிறப்புடைய மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றம்* என்னும் புறநானூற்று தொடரால் தெளிவாகிறது. அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும்.

**திறவுச் சொற்கள்:** *திருக்குறள்*, திருவள்ளுவர், வாழ்வியல், அறம்

**முன்னுரை**

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் ஒளிவிளக்கு திருக்குறள். முப்பால் என்று போற்றப்படும் திருக்குறள், அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய வாழ்வியல் உண்மைகளை உணர்த்துகிறது. பழந்தமிழ்ப் பாடலாகிய புறநானூறு. அறனும் பொருளும் இன்பமும் ஆற்றும் பெருமநின் செல்வம்1 என்னும் தொடரால் அறத்தை முதன்மைப்படுத்தி மொழிகிறது. அறத்தின் வழியே பொருளும் இன்பமும் தழைத்தோங்கும் என்பது சிறப்புடைய மரபின் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றம்2 என்னும் புறநானூற்று தொடரால் தெளிவாகிறது. அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும். அறவழியில் இன்பம் துயிக்க வேண்டும் என்பது பழந்தமிழர் வாழ்வியல் நெறி.

**ஒரு குறளில் இரு கூறுகள்**

**தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள்-56)**

பெண்ணின் பண்பியல்புகள் நான்கும் ஆணுக்கும் உரியவையே என்பது வள்ளுவம் என்று பேராசிரியர் வளன் அரசு மாநிலத் தமிழ்ச் சங்கத்தில் உலகத் திருக்குறள் மைய நிகழ்ச்சி ஒன்றில் தெளிவுறுத்தியுள்ளார். தன்னைப் பேணிக் காத்துக் கொள்வது, தன்னை மனைவியாக ஏற்றுக் கொண்ட ஆணை ஏற்றுப் போற்றிப் பேணிப் பாராட்டுவது, குடும்பப் புகழை நிலைநாட்டும் வகையில் பண்பாட்டுப் பெட்டகமாக வாழ்வது ஆகிய இம்மூன்று செயல்களைத் தொடர்ந்தது நிறைவேற்றும் போது அயராது செயலாற்றுவதும் பெண்ணின் பெருமைக்குரிய பண்புகள் ஆகும் என்கிறார் திருவள்ளுவர். தொல்காப்பியர் கூறுவது போன்று, ஒரு பாலுக்கு உரியது ஏனை மறுபாலுக்கும் உரியது என்று கூறத் தக்க வகையில், இந்த நான்கு பண்புக் கூறுகளும் ஆணுக்கும் உரியவை ஆகும். தன்னைப் பேணிக் காத்துக் கொள்வதும் தன்னை கணவனாக ஏற்றுக் கொண்ட மனைவியைப் பேணிப் போற்றிப்

பாதுகாப்பதும் குடும்பத்தின் பெருமையை நிலைநாட்டுவதும் இத்தகைய கடமைகளை நிறைவேற்றும் போது அயராது செயலாற்றுவதும் ஆணுக்குரிய பண்புகளாகும்.

ஒரே குறளில் இரு கூறுகள் வீறுடன் விளங்குகின்றன. குற்றமே காக்க பொருளாக என்னும் திருக்குறள் பழி பாவங்களுக்கு அஞ்சி ஆடவரும் மகளிரும் வாழ வேண்டும் என்று வலியுறுத்துவது கருதத்தக்கது.

**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல் (குறள்-44)**

தீய வழிகளைத் தள்ளிவிட்டு முறையாகப் பொருள் சேர்த்து, பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டால் அச்செல்வம் அவனுக்கு மட்டும் அல்லாமல் அவன் வழித்தோன்றல்களுக்கும் எப்போதும் குறைவின்றிப் பயன்தரும் என்பது உண்மை.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின் (குறள்-54)**

என்னும் திருக்குறள் பெண்ணுக்குக் கற்பினை வலியுறுத்திப் பெருமை சேர்க்கிறது: அதே போன்று ஆணும் பெருமைக்கு உரியவன் ஆக விளங்க வேண்டும் என்றால் தன்னையும் தன் கற்பொழுக்கத்தினையும் பேணிக் காக்க வேண்டும் என்பது வள்ளுவம்.

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (குறள்-974)**

தங்கள் மனத்திட்பத்தால் ஐம்பொறிகளையும் அடக்கியாளும் பத்தினிப் பெண்டிரைப் போன்று ஒவ்வொரு கணவனும் தன்னைத் தானே காத்துக் கொண்டு வாழ்ந்தால் பெருமைக்கு உரியவன் ஆவான். இக்கருத்தை ஓர்ந்து உணர்ந்த பாரதியார், கற்பென்று சொல்ல வந்தார் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்று பாடிப் பரவியுள்ளார் என்பது கருதத்தக்கது.

**பிறன்மனை நோக்காப் பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு (குறள்-148)**

என்னும் திருக்குறள் ஆணும் கற்பொழுக்கம் தவறாது வாழ வேண்டும் என்று தெளிவுறுத்துகிறது. அவ்வாறு வாழ்பவனே பேராண்மை பொருந்தியவன் என்று பாராட்டப்படுவான். மேலும், போற்றிப் புகழ்வதற்கு உரியவர் பிறர் மனைவியைத் தழுவாதவரே என்று தெளிவுறுத்துகிறார்.

**நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்**
**பிறற்குரியாள் தோள்தோயா தார் (குறள்-149)**

கடல் சூழ்ந்த இந்த உலகில் பிறர் மனைவியின் தோளை தழுவாதவரே நல்லவர் என்று போற்றிப் புகழ்வதற்கு உரியவர் ஆவார்.

**திருவள்ளுவர் விளம்பும் அறநெறிகள்:**

தேம்பாவணியில் திருவள்ளுவரின் வாழ்வியல் அறநெறிகள் அனைத்தும் சிறப்பிடம் பெறுகின்றன. வள்ளுவம் விளம்பும் அறநெறிகள் முப்பத்திரண்டு என்று வரையறை செய்யலாம்:

1. அடக்கம் உடைமை
2. அருள் உடைமை
3. அவா அறுத்தல்
4. அழுக்காறு கொள்ளாதிருத்தல்
5. அறிவுடைமை
6. அன்புடைமை
7. ஆள்வினை உடைமை
8. இடம் அறிதல்

9. இடுக்கண் அழியாமை
10. இனியவை கூறல்
11. இன்னா செய்யாமை
12. ஈத்துவக்கும் இன்பம்
13. ஊக்கமுடைமை
14. ஓப்புரவறிதல்
15. ஒழுக்கம் உடைமை
16. கண்ணோட்டம் என்னும் பரிவு
17. காலம் அறிதல்
18. குடி செயல் வகை
19. குறிப்பு அறிதல்
20. குற்றம் நீக்குதல்
21. கொல்லாமை
22. செய்ந்நன்றி அறிதல்
23. தீவினை அச்சம்
24. நடுவு நிலைமை
25. பண்புடைமை
26. பயனில் சொல்லாமை
27. பிறனில் விழையாமை
28. புறங்கூறாமை
29. பெரியாரைத் துணைக்கோடல்
30. பொறையுடைமை
31. வாய்மை
32. விருந்தோம்பல்

**அடக்கம் உடைமை**

உலக மக்கள் அனைவரும் அடக்கம் என்னும் பண்பை உறுதிப் பொருளாகப் பேணிக் காக்க வேண்டும் என்று திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார். மனத்தாலும் மொழியாலும் உடலாலும் அடங்கியிருத்தலே அடக்கம் உடைமை என்பர்.

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங்(கு) இல்லை உயிர்க்கு (குறள்-122)**

இல்வாழ்க்கை ஆகிய நல்ல நெறியிலிருந்து மாறுபடாமல் அடக்கத்தோடு வாழ்பவரின் உயர்வு, மலையின் உயர்வைக் காட்டிலும் மிகவும் பெரியது, ஓங்கி உயர்ந்த மலை, நிலையில் திரியாது: ஆனால் அடங்காது. எனவே, அம்மலையினைக் காட்டிலும் அடக்கமுடைமை சிறந்ததாகும். ஆபத்து வரும்போது ஆமை தன் கால்கள் நான்கினையும் தலையினையும் தன் ஓட்டுக்குள் மறைத்துக் கொள்கிறது. அதைப்போன்று, அறத்திற்குக் கேடு சூழும் தீமை வரும்போது ஒருவன் தன் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள வேண்டும். ஆந்த ஆற்றல் அவனுக்கு அரண் ஆகும்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்(பு) உடைத்து (குறள்-126)**

ஒருவனை ஒருவன் நெருப்பினால் சுட்ட புண் வெளியே புண்ணாகத் தோன்றினாலும் ஆறிப்போகும்: ஆனால் வெறுப்பினால் ஒருவனைக் கடுஞ் சொற்கள் கொண்டு திட்டும் சொற்கள் ஏற்படுத்தும் துன்பம் மனத்துள்ளே ஆறாத தழும்பாகும் என்பர்.

**தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு (குறள்-129)**

**அன்புடைமை**

உலக மக்கள் எல்லோரிடமும் அன்புடையவராக விளங்க வேண்டும், அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கு உரியவையாகக் கருதுவர்: ஆனால் அன்பு உள்ளம் கொண்டவர் தம் உடல், பொருள், உயிர் ஆகிய அனைத்தையும் பிறர்க்கு வழங்குவர் என்கிறார்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு (குறள்-72)**

நல்லறச் செயல்களுக்கு மட்டுமே அன்பு துணை புரியும் என்று கூறுபவர் அன்பில் இயல்பை முழுமையாக அறியாதவர் ஆவர்: அந்த அன்பே துன்புறுத்தும் வீரச் செயல்களுக்கும் துணை போகும்.

**அறத்திற்கே அன்புசார்(பு) என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை (குறள்-76)**

அன்பு நிறைந்த உள்ளத்துடன் இயங்குவதே உயிருடன் கூடிய உடலாகும். அன்பு நெஞ்சம் இல்லாத உடல் உயிரற்ற எலும்புக் கூட்டைத் தோலால் போர்த்திய வெற்றுடல் ஆகும் என்று தெரிவித்துள்ளார் திருவள்ளுவர்.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்(கு)**
**என்புதோல் போர்த்த உடம்பு (குறள்-80)**

**இன்னா செய்யாமை**

பிறர்க்குத் துன்பம் எதுவும் செய்யாதிருப்பது பேரறமாகும். ஒருவர் தமக்குத் தீமை செய்தவரைத் தண்டிப்பது என்பது அவ்வாறு தீமை செய்தவர் வெட்கித் தலைகுனியுமாறு நன்மை செய்து, அவர் செய்த தீமையினையும் தாம் செய்த நன்மையினையும் மறந்து விடுவதே ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல் (குறள்-314)**

பிற உயிர்களுக்கு வரும் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதிப் பேணிப் போற்றாவிட்டால் ஒருவர் பெற்ற அறிவினால் பயன் எதுவும் இல்லை என்பது வள்ளுவம்.

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை (குறள்-315)**

சிறிய அளவில் கூட எப்போதும் எவருக்கும் துன்பம் தரும் சிறுமைச் செயலை மனத்தானும் நினைக்காமல் இருப்பதே முதன்மைச் சிறப்பு என்பர் திருவள்ளுவர்.

**எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்**
**மாணாசெய் யாமை தலை (குறள்-317)**

**விருந்தோம்பல்**

வீட்டுக்குப் புதியவராக வருவோரைப் பேணிப்போற்றுதல் தலை சிறந்த அறமாகும். விருந்தினரை நாள்தோறும் வரவேற்றுப் பேணிப் போற்றுபவரின் வாழ்வு, வறுமைத் துன்பத்தால் ஒருபோதும் கெட்டுப் போகாது.

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று (குறள்-83)**

வீட்டுக்கு வந்த விருந்தினரைப் பேணிப் போற்றி மேலும் வரும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் மேலான வானத்தவர் விரும்பி வரவேற்றுப் போற்றும் சிறந்த விருந்தினன் ஆவான்.

**செல்விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு (குறள்-86)**

மலர்களில் மென்மை மிக்கது அனிச்சப்பூ. அதனை மூக்கால் நுகரும்போதே மூக்கின் வெப்பக் காற்றால் வாடிவிடும். வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்காவிட்டால் அவர்கள் பெரிதும் வருந்துவர் என்கிறார் திருவள்ளுவர்.

**நிறைவுரை**

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

படிக்கப் படிக்க நல்ல நூல்களிலிருந்து அறிவார்ந்த இன்பம் தோன்றும்: அதுபோன்று பழகப்பழக நல்ல பண்பாளரின் நட்பு பேரின்பம் தருவதாகும். திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் நட்புத் தொடர்பாக நூற்று எழுபத்து மூன்று பாக்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. திருக்குறளில் வாழ்வியல் அறநெறிகள் பற்றி விரிப்பின் பெருகும். தொகுப்பின் எஞ்சும்.

**துணைநூற்பட்டியல்**

[1] பி.எஸ். ஆச்சார்யா (உ.ஆ) *திருக்குறள்*, நர்மதா பதிப்பகம், சென்னை –17, பதிப்பாண்டு, 2020.

[2] கழக வெளியீடு. *பதினெண்கீழ்க்கணக்கு, நாடியார்*. திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்பகம் லிட், 522, ஆழ்வார்பேட்டை, சென்னை -18 பதிப்பாண்டு – டிசம்பர் 2007.

[3] சி.கணேசையர். *தொல்காப்பிய உரைத்தொகை* 3. தமிழ் மண் பதிப்பகம், சென்னை – 17, 1943.

[4] முனைவர் கு.வே.பாலசுப்பிரமணியன். *புறநானூறு*. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98, முதற்பதிப்பு – ஏப்ரல் 2004.

[5] *பதினெண்கீழ்கணக்கு 1, நான்மணிக்கடிகை*. மாணவர் பதிப்பகம், சென்னை – 17, 2014.

[6] *புறநானூறு மூலமும் உரையும்* - கழக வெளியீடு.

[7] *திருக்குறள் மூலமும் தெளிவுரையும்* – தமிழண்ணல்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.